TAMIL NADU LEGISLAT
21 JUL 197
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Rural Water Supply Scheme.

*296 *Q.*—THIRU N. K. PALANISAMY:
THIRU A. PARANDHAMAN
Will the Hon. the Chief Minister be pleased to state the amount of grant received from the Centre for Rural Water Supply Scheme in this State during 1972?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நடப்பாண்டு ஆகிய 1972—73-க்கு இதுவரை மேற்சொன்ன திட்டத்துக்கு மானியமாக ரூ. 50 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் எத்தனை ஆண்டுக் காலத்தில் பூர்த்தி ஆகும்? அதுவரை எவ்வளவு மானியம் கொடுப்பதாக மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கிராமங்களைப் பொறுத்த வரையில், இப்பொழுது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு, குடிநீர் வாயில் எதுவும் இல்லாத கிராமங்கள் 4,916 என்றும், குடிநீர் வாயில்கள் குறைவாக உள்ள கிராமங்கள் 11,814 என்றும், குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் தோன்றும் நோயினால் பாதிக்கப்படுகின்ற கிராமங்கள் 2,230 என்றும், ஆக மொத்தம் 18,960 கிராமங்கள் இந்தக் குடிநீர் வசதி இல்லாத கிராமங்களாக இருக்கின்றன. இவைகளுக்கு மத்திய அரசின்

சார்பில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக் காலத்திற்குள்ளாக இந்தக் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் குடிநீர் வாரியத்தினால் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிற முயற்சியின் காரணமாக முதலில் 1972—73-க்கு 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். அதில் 50 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டுக்கு, 1973—74-க்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து பணம் கிடைக்கும் வேகத்தில் இந்த வேலைகள் விரைவாக முடிவடையும்.

திரு. ஆ. பரந்தாமன் : மத்திய அரசு தருகிற இந்த மானியம் தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களினுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா ? அல்லது, வேறு எந்த அடிப்படையில் அவர்கள் இந்த மானியத்தைத் தருகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எண்ணிக்கையில் ஒதுக்கப்படவில்லை. நாம் அனுப்புகின்ற திட்டங்களை வைத்து அவர்கள் ஒதுக்குகிறார்கள். கிட்டத்தட்ட 2010 திட்டங்களை தமிழ் நாடு குடிநீர் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் வகுத்து மத்திய அரசின் சுகாதார குடும்ப நலத் திட்ட அமைச்சகத்தின் ஆலோசனைக்கு அனுப்பினார்கள். அதிலே 421 திட்டங்களைத்தான் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் குடிநீர் வாரியத்தின் மூலமாகத் தண்ணீர் வழங்கப்படுவதற்குமுன் பரிசோதனையாக சர்வே செய்யும்போது கட்டணம் வசூலிக்கப் படுகிறது. மேஜர் பஞ்சாயத்தினிடமும் அப்படி வசூலிக்கப் படுகிறது. பஞ்சாயத்துக்களில் சில வசதி இல்லாதவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட மேஜர் பஞ்சாயத்துக்களையும் இணைத்து சலுகை தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லாத பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இருந்தும் கொடுக்காத பொல்லாத பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. (சிரிப்பு)

திரு. கா. வேழவேந்தன் : மத்திய அரசு ஒதுக்குகிற தொகை, பல்லாயிரம் கிராமங்களைக் கொண்ட தமிழ் நாட்டுக்கு மிகக் குறைவாக இருக்கிறது. மாநில அரசினிடத்தும் இத்தகைய பெரிய திட்டத்திற்குத் தேவையான நிதி வசதியை உடனடியாக

1973 மார்ச் 9]

ஒதுக்கக்கூடிய சூழ்நிலையும் இல்லை. ஆகவே, கிராமப் பஞ்சாயத்துக்களிடமிருந்தும் அவர்கள் பங்குத் தொகை கேட்க வேண்டியிருக்கிறது. அதனால், எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது வேறு நிறுவனங்கள் மூலமாகவோ கடனுதவி கேட்டுப் பெற்று, ஆண்டுக்கு 500 ரூபாய் வீதம் ஒவ்வொரு பஞ்சாயத்தினிடமிருந்தும் தொகையை வசூலித்துத் திருப்பிச் செலுத்தும் வகையில் ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இருக்கிற சிரமங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டும், மத்திய அரசு இந்த கிராமக் குடி நீர் வசதிக்குத் தரும் பணம் தாமதமாகவும் நாம் எண்ணுகிற அளவுக்கும் கிடைக்காததை மனத்திலே வைத்தும், ஏழு ஆண்டுக் காலத்திற்குள் நம்முடைய தமிழ் நாட்டினுடைய கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் குடிநீர்த் தேவையை நிறைவு செய்துவிட வேண்டும் என்றும் 20 கோடி ரூபாய் அளவில் இந்த ஆண்டு நாம் திட்டம் தீட்டி, ஏழாண்டுக் காலத்தில் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய குடி நீர் வடிகால் வாரியத்தின் சார்பாகத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

திரு. வ. கிருஷ்ணமூர்த்தி : திருச்சி நகராட்சியில் பணம் இருந்தும், காவிரியாற்றில் தண்ணீர் கரை புரண்டு ஓடியும், பொறியியல் நிபுணர்கள் இருந்தும், அங்கே தண்ணீர்ப் பஞ்சம் தீரவில்லை என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்தச் சங்கடங்களை அரசு அறியும். அதற்கு ஆவன செய்தும் இருக்கிறது.

திரு. வீ. மலைக்கண்ணன் : அவைத் தலைவர் அவர்களே, 1972—73 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு 50 இலட்ச ரூபாய் மானியம் தருவதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு நம்முடைய அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கிராமப்புறத் திட்டங்களைப் பொறுத்தவரை மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொண்டு, திட்டங்களை நம்மையே போட்டு அனுப்பச் சொல்கிறது. நாம் இப்பொழுது சிறப்பாக அமைத்திருக்கிற குடி நீர்

வாரியத்தின் சார்பாக 2,010 திட்டங்களை 1,226 இலட்ச ரூபாய் செலவில் நிறைவேற்றுவதற்கு அனுப்பி வைத்தும் 421 திட்டங்களைத் தான் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறத் திட்டங்களுக்காக மத்திய அரசு இந்தியா அளவில் இந்தக் குடி நீர் வசதி செய்யத் திட்டம் தீட்டியிருக்கிறது. ஆனாலும் அது வேகமாக நடைபெறவில்லை.

திரு. நா. வீராசாமி : 2,010 திட்டங்களில் 421 திட்டங்களை ஏற்றுக்கொண்டதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போட்டனுப்பிய திட்டங்களை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் சொல்லியிருக்கிறார்களா ? குடி நீர் வசதிக்காகப் போட்டனுப்பப் படுகிற திட்டங்களில் பாதி அளவுக்காவது மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் வற்புறுத்தி வருகிறோம். முழு மானியம் அவர்களே தரவேண்டும் என்பது தான் இங்குள்ள நிலை. நாம் அனுப்பிய எல்லாத் திட்டங்களையும் உடனடியாகப் பரிசீலித்து அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை குடிநீர் வடிகால் வாரியம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை குடி நீர்த் திட்டம் சரிவர அமையாததால் அங்கு குடி நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சிறுவாணித் திட்டத்தை உடனடியாக அமல் நடத்த அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேரள அரசுக்கு உங்களுடைய கட்சியின் சார்பில் பரிந்துரை செய்தால் நலமாக இருக்கும்.

திரு. என். மருதாசலம் : நான் நம்முடைய தமிழ் நாடு அரசைக் கேட்கிறேன். எந்தக் கட்சியாக இருந்தாலும், அரசு வேறு ; கட்சி வேறு. ஆகையால் தமிழக அரசை நான் கேட்கிறேன்.

(விடை இல்லை.)